ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

சாப்டூர் ஜமீன்

அத்திபுரியிலெழுந்தருளிய

ஆனந்த

மாரியம்மன் மீது

வழிநடை மருடச்சிந்து.

ஷை ஜமீன் குடிப்பட்டிகிராமம் மு. கந்தசாமி நாயக்கர் ஷையூர் மு. பழனிக்குமாரு நாயக்கர், ஷையூர் பொன்னுங்கூடஞ்செட்டியார், ஷையூர் செல்லாண்டித்தேவர் கைலாசபுரம் கிராமம் மு. கந்தசாமி நாயக்கர், ஷையூர் கோபாலுநாயக்கர், ஷையூர் மத்தயாநாயக்கர் ஷையூர் மூத்துச்சாமித்தேவர், ஷையூர் சங்கரகோபாலு அண்ணாவி இவர்கள் கேட்டுக்கொண்ட விருப்பத்தின்படி

வில்வமாநகரேன்ற வில்லாணி கிராமம்

புலவர் பெருமான் புகழும் மாணக்கரான

சர்வசமய சபாரஞ்சித ரா்ஜபார்ட்

R.S. வெங்கடசாமி அய்யரவர்கள்

இயற்றியது.

மேல்கண்ட குடிப்பட்டி சுப்பஞ்செட்டியார் குமாரர் குப்பையாண்டிசெட்டியாரவர்களாலங்கிகாரஞ்செய்து

மதுரை முஹம்மதியன் பிரஸில் பதிப்பிக்கப்பெற்றது.

இதன் விலை) 1924. (அணா 4.

உ

சாப்டூர் ஜமீன் கைலாசபுரம் கோவிலர்ச்சகம் அத்வைத சங்கரய்யரவர்கள்

இயற்றிய சாற்றுக்கவி.

இப்புவியில் புகழ்பெற்ற எங்கள் வெங்கிடசாமி
தப்பிதங்க ளொன்றுமின்றி சாற்றினன்-அப்பணிந்த
அப்பன்கைலை வாளானந்த வல்லியுடன்
ஒப்பிமகிழ் வுற்று ருகந்து

ஜாரீ குடிப்பட்டி கிருமத்திலிருக்கும் சுப்பஞ்செட்டியார் குமாரர் சங்கீதவித்வான் குப்பையாண்டி செட்டியார்

அவர்களியற்றியது.

இன்பாய் வழிநடைச்சிந் தேற்றமிகு மேன்மோளி கண்
டன்பா யுலகோ ரதிசயிப்ப-பண்பாதேர்
வெங்கிடசாமி அய்யர் விகசிதமதா யுரைத்த
இங்கிதத்தை யென்றுரைப்பே னின்று

சாப்டூர் ஜமீன் அத்திப்பட்டி கிருமத்திலிருக்கும் ச ஆ. ராமசாமித் தேவரியற்றியது.

செங்கமலக் கண்ணன் திருவடியைப் போற்றி செய்தே
மங்களஞ்சேர் வெங்கடசாமி வழுத்தும் வழிச்சிந்து
அங்கமிகக் குளிர்ந்து அவனிபுகழ் மாமதுரை
சங்கத் தமிழிதென சாற்று

ஷையூர் திருமலைநம்பி அய்யரவர்களியற்றியது

இத்தரையில் மேன்மைபெற்ற எங்கள் வெங்கிடசாமி
முத்தமிழால்ச் சிந்து மொழிந்தான்-பக்தியுடன்
எத்தலத்தி லுற்றவரும் இந்நூலை பார்த்து
புத்தமுத மென்றே பு[illegible]

உ

ஸ்ரீராமஜெயம்.

அத்திபட்டி ஆனந்தமாரியம்மன் மீது வழிநடைச் சிந்து

வெண்பா.

அவனிபுக ழத்திபட்டி ஆனந்த மாரியின் மேல்
புவனமகி ழப்புகன்ற சிந்து—கவனமுடன்
பாடித் துதிக்கப் பார்வதியுடன் பொதுவில்
ஆடியவன் மைந்த னெம்மை யாழ்வான்

வேடிக்கை பார்க்கலாம் வாடி-என்ற வர்ணமெட்டு.

பல்லவி.

அத்திபுரிதனை நாடி—போவோம் உத்தமியே நாமும் கூடி

அநுபல்லவி.

சத்தி சிவசங்கரி கௌவுரி மாரி
பத்தினியாள்திருப் பாதந்தனை கோரி அத்தி

சரணங்கள்.

1 சித்திரமே கைலாசபுரம் வளர்
தேவியே நீயென் முன்னடி—சொன்ன
செய்தியைப் போலவே தையலே நாமளும்
செல்பவர் கூடவே நாடி
பத்தரைமாத்துப் பசுந்தங்கமே யெந்தன்
பாவையே நாமளுங் கூடி—இந்த
பார்புகளும் அத்தி மாநகரானந்த
மாரிமே லப்பன்னிசை பாடி

மத்தகத்தை நீ கர்த்த தனத்தாளே
மங்கையே யெந்தன் மனதுகந் தாளே
சுத்தவிரங்க ளுதித்த மனத்தாளே
தோகை மயிலாளே-பாகுமொழி யாளே அத்தி

2 கம்மல் சிமிக்கி கர்னப்பு ஒன்னப்பு
கொப்பு பச்சைக்கல்லை நீ மாட்டு—என்

கண்ணே விலையுயர் தங்கச்சரடு
பதக்கம் சரப்பளி பூட்டு
செம்மையதாகவே பிச்சிமலரை
சிரசினில் வாசமாய் சூட்டு—உன்
செங்கை வளையையு முங்கை முதாரியும்
சிங்கார மாகவே காட்டு
பொம்மை விருதுடன் தண்டை சதங்கையும்
பீலியுமிஞ்சியும் பாதசரங்களும்
நன்மையதான தோர் சேலைரவிக்கையும்
நற்கனியே நீயணிந்து இக்கணம் வாருயுகந்து அத்தி

3 ராஜவேல் மாணிக்கம் நற்குணம் நாயகம்
நாகமுத்து பொன்னுச்சாமி—இன்னும்
ரஞ்சிதங்கமலம் ராசாம்பாள் சாரதா
ஞானலட்சுமி சிவகாமி
நேசமுடனவர் ஜோடி ஜோடியாக
நிர்ப்பதைப் பாரமிராமி—அடி
நீ சிலவுக் கைந்துரூபா யெடுத்துவர
ரெம்பக் கேட்டா வைவாள்மாமி
மாசில்லா மாமதியாளே அத்திநகர்
வாசம்புரிந்திடு மாரியாத்தா ளெதிர்
நேசமுடன் சென்று நம்மள் குறைபகர்
நிதிமிகவே தந்திடுவாள் அதிவிரைவாய் வந்திடுவோம் (அ)

4 கங்கைதும்பை கொன்றைத் திங்களணி
கைலாச நாதர்கோவில் பாரும்—திருக்
கந்தன் கணபதிக் கன்னியாய் வந்ததோ
ரானந்த வல்லியை நேரும்
மங்களமாகவே யெங்கும் புகழ்கின்ற
மன்னன் கருப்பன்முன் வாரும்—யெந்தன்
மானே அவர்பதம் நானே துதித்திட
வாழ்வோம் குபேரன்போல் ஜோரும்
மங்கையே இங்குயர் மாடமாளிகையும்
மன்னவர்கள்கூடும் சொர்ணச் சாவடியும்
தங்கமே கந்தவேள் காரணஞ்சவுக்கையும்
தையல் முத்தாலம்மன் துய்யபதம்பாடி அத்தி

5 கோடிநாயக்கர் குடிகள் வளர்வது
கோகிலமே மகா மேரு—மதிக்
கொன்றைச் சடைவள்ளல் வாழ்வதி
னாலே நான் கூறினேன் சந்தேகந் தீரு
காபி குடித்திடும் கூசா யெடுத்துமே
கனலியே நீ வநது சேரு—மிகுக்
கருணை பொங்கியப் பழனியாண்டவன்
காக்ஷியை நீ யின்று பாரு
சோபிதமானதோர் காவடிக் கூட்டமும்
சுந்தர வாலீபர்க் கும்மிகளாட்டமும்
தாமதமன்றி நம் தீவினை ஓட்டமும்
தையலே நாம் கண்டு செய்யுள் பாடிக்கொண்டு அத்தி

6 ரத்தினத்தாலே படித்துறைக ளிரு
பக்கமும் மேவிடத் தானே—சிந்து
நர்மதை கோதாவரி கிஸ்ணா தீர்த்
தம்போல் நன்றாய் வருகுது தேனே
முத்தைநிகர் தந்த சித்தினிபெண்களும்
மூழ்கி குளிப்பதை மானே—அடி
மோய்குழலே யிந்த ஸ்ரீகள் விபரத்தை
முக்கியமாகச் சொல்வேனே
பத்தினியே வாணிலட்சுமி பார்வதி
பக்திமிகுந்த இந்திராணி அருந்ததி
சத்யலோக தேவதாசிகளு—மதி
சந்தோஷ ஸ்தானஞ் செய் விந்தையைப் பார்த்து மெய்

7 அன்னை மகிழவே முன்னாழ்முத
மழித்த கெருடனைத் தானே—வெகு
நன்னயமாகவே வாகனமாய் கொண்ட
நாத னெங்கள் பெருமானே
கண்ணன் வழர்ந்திடு மாலயம் பாரடி
கர்பில் மிக்க மடமானே—உயர்
கார்தவழுந்திருக் கோவி லலங்காரக்
காக்ஷியைச் சொல்லுவே நானே
விண்ணவர்கள் தங்குங் கோபுர மேடையும்
மேகநிரம்போல் வளைந்தகி லோடையும்
கண்மணியே வுந்தன் கண்களின் சாடையும்
கண்டு மகிழ்ந்தேனே செண்டுமுகில் மானே அத்தி

8 சங்கரன் செய்தவத் தைங்கரன் வாழ்ந்திடுஞ்
சன்னதி பாரடி மயிலே—அவர்
தஞ்சமென்று இருகஞ்ச பாதமல
ரஞ்சலி செய்குவோம் குயிலே
மங்களமாய்நமக் கெந்த நாளுமவர்
வந்தருள் செய்குவா ரொயிலே—திரு
மாமதிபேவலஞ் சுற்றிவா யின்னகர்
வலஞ்சொல்வே ணடித் தையலே
  தங்கமே யெங்கு முள்ங்கிய கியாதி
  சத்திசிவன் பவனிவரும் வீதி
  செங்கதிர் போல ஜொலிக்குதே ஜோதி
  சித்திரமே நீ மகிழ்ந்து இத்ததிவாரு யுகந்து அ ே

9 கதிரவ னனுதின மருவிய
காக்ஷியிருந்த நன்மாடி—எதிர் கண்டவர்களுருக்
கண்டுகொள்ள வொளி
காட்டிடுது பார் கண்ணாடி
மதிவதனமே சிறந்த பெண்மணி
மானே வுனக்கு நான் ஜோடி—அதி
மகிழ்வுட னிங்குப் புகழ்வதை
மனத் தன்புடன் கேட்டுவா நாடி
  அதிரூப லாவண்ய மிகுமாதே
  அந்தணர் வாழ்கின்ற வீதியின் மீதே
  மதிகிகிரை வைசியர் தோதே
  வர்னக் குயிலே மானே சொர்னக் கிளியே தேனே (அ)

10 காசினியை யாழுங் கம்பளத்தார் வீதி
கன்னியே நீ நன்றாய்ப் பாரு—மகா
காரியஸ்தர் மரியாதை ராமனைப்போல்
கண்டுகொள் வாரனாயக் தேரு
மாசில்லா ததுடி மாநகர மென்று
மானிலத் தோர் சொல்வார் பேரு—யென்
மங்கையே யின்னகர் மங்களமாகவே
வாழ்ந்திட ஆசிகள் கூறு
  மாசற்ற ரோஜா மலர்வாச னைக்காரி
  மாதவனும் ரெகுநாதன் சகோதரி
  நேசமுட னம்மையாளுந் தயாபரி
  கேர்த்தி முத்தாளம்மன் கீர்த்திதனைப் பாடி அத்தி

11 பச்சைமரகத மாணிக்கத்தால் செய்த
பண்புள்ள சாவடி யிதுவே — இதில்
பாரதம்பாகவதம் ராமாயணம்
பிரசங்கம் செய்வதற்குப் பொதுவே
மச்சவதாரன் மகிழ்ந்துறை நந்த
வனமதைப் பாரடி மதுவே — திரு
மாதவனாகிய ஆதிமூலந் தன்னை
வணங்கி நடடிவதும்வ

கச்சணிந்த கொங்கையாளே யிதோ நேரு
கண்ணே சதுராச லக்கரை மீதேரு
லெச்சணமான மடைகட்டடம் பாரு
நேர்த்தியுள்ள கூடமானே கீர்த்திபெறச் சொல் வேனோ

வேறுசந்தம் வாசிமலை மீதிலுறை மாயன் என்ற வர்ணமெட்டு

1 சதுரகிரி மீதினிலே உருகும் தண்ணி
சங்கமாயிந்த யிடத்தில் பெருகும் மடை
தன்வழியாய் நஞ்சைதனில் வருகும் வந்து
நவமணிநெல் புவனமிசை அவரவர்கள் மனமகிழ
நாடும் பொலி கூடும்

2 கன்னிமாரின் சன்னிதியை நாடு கனி
வாகவே பதங்களை நீ பாடு அடி
காதலியே தெற்குவழி கூடு இளங்
காளையர்கள் ஸ்திரீயுடன் கலந்துபேசிச் செல்வதைப்பார்
கனியே நவ மணியே

3 பூரணிபுக் கலைமகிழ் சமேதன் சிவ
புத்திரனாய் வந்தகைய்ய நாதன் கண்மாய்
புரவுகளைக் காக்குமனு நீதன் இந்த
பூதலத்தி லாதரவாய் நீதமுடன் பாதுபுரி
புண்யன் மாக்கண்யன்

4 சேவடிதனைத் தொழுதால் மாதே நம்மை
தீவினைக ளொன்று மணுகாதே என்று
செப்பிடும் வேதங்கள் புவிமீதே உயர்
சித்திரத்தை யொத்தமுத்து ரத்தினமே யித்தினம் நீ
சேவி மகிழ் மேவி

5 அண்ணல் கருப்பண்ணனைப் பார் மதியே மிகுந்
தன்புடன் பணிவமடி ரதியே நம்ம
தகமகிழத் தந்திடுவார் விதியே யெந்தன்

ஆயிழையே வாசனைகள் நேயமுடன் தந்திடுவாய்
அளியே பேசுங் கிளியே

6 கோதையே பாறாய் புளியந் தோப்பு   தெற்கே
கோகிலமேப் பொட்டிநாய்க்கன் தாப்பு   வேத
கோஷ்டங்கள் முளங்குமிரு மாப்பு   வர்ண
குஞ்சரமேச் செஞ்சிலம் பசைந்திடவே அஞ்சுகம்போல்
பாடு வழி கூடு

7 அன்னமே கொடுந்தருளு மீசன்   திரு
வாடுதுறைத் தம்பிரானன் னேசன்   துறைச்
சாமி பிள்ளை யென்ற விசுவாசன்   தர்
மாசனமாய்த் தந்தவொரு வாசமிகு முல்லையிலம்
பாறாய் களி கூறாய்

8 பாம்புனு செட்டி மகிழ்ந்து தானே   செய்த
பக்தியுள்ள தெப்பமிது மானே   அடி
பத்தினியே உண்மை சொல்லு வேனே   இந்தப்
பாருலகோர் யாருமிதில் நீரருந்தினால் பிணிகள்
தீரும் புவி தோரும்

9 சூரமுத்துதர்ம மதை அடுத்தோம்   நம்மை
சூழவந்த துயரமதை விடுத்தோம்   இந்தச்
சோலையிலிருந்து காபிக் குடித்தோம்   மிக
சுந்தரியே யெந்தனுக் குகந்தவளே சுருள்மடித்து
நீயே கொடுப்பாயே

10 மாமயிலே கருசல்லில மீது   தேவ
மாதர்வந்து வாழ்வர்களிப் போது   அடி
மாமணியே நானுனக்கு தோது   அரி
மாதவ மெப்போது மறவாதவன் மலர்ப்பதத்தை
அடுப்போம் வழி நடப்போம்

வேறு சந்தம்.

நாரதன் சொன்ன காரணப்படி—என்ற வர்ணமெட்டு.

1 காளியின்குலக் காளையன் றிருக்
கட்டடந் தனைப் பாறாய்   யெந்தன்
கட்டழகியே நேறாய்   கதிர்
போலே தோணுது ஜோறாய்   யெந்தன்
காதலி வேகமாக யென்னுடன்
கலந்து பேசியே வாறாய்

2 தேவியே தெற்கே பாரடி
திருமாலெனுஞ் சுந்த ராசன் பழ
யூரெனும் நகர் வாசன் நம்மை
பாதுகார்க்கும் நன்னேசன் இந்த
பாரில் வெங்கடசாமி தாசன் பணிந்திடுஞ் செகதீசன்

3 அன்னவன் கிருபையா லருள்சது
ராசலத்தகி யோகன் ராம
சாமிக் காமய வாகன் நம்மை
யாண்டிடு மகா யூகன் அவ
ரன்புட னரசாக்ஷி செய்வதிலன்னமே மாவிவேகன்

4 பழயூர் வாசனும் கைலேயீசனும்
பாது கார்த்திடுஞ் சீமான் இந்த
பாரில் யார்க்குமே கோமான் திரு
பன்னிசை பாடும் பூமான் அடி
பாவையே அத்திமாகர் வளர்பாவையே மகிழ் நேமன்

5 கைலேநாதன் கமலக் கண்ணன்
கருணையால் வந்த அய்யன் கலி
யுக வரதமா மெய்யன் அருள்
காக்ஷி தந்திடு கையன் அடி
கச்சணி கொங்கை மங்கையே நம்மை கார்த்திடுந் தவத்
[துய்யன்

6 தேவகன்னிகை மாமலரடி
தேவியே நாமும் பணிந்து நம்மள்
சித்தமே மிக மகிழ்ந்து தே
வாரப் பன்னிசை புகழ்ந்து உயர்
சித்திரம் நிகரத்தி மாநகர் சேருமோ மனதுகந்து

7 மட்டிலலாத தோர் பொட்டலூரணி
மாதே நீ யறிவாயே ஸ்நானம்
வாகுடன் செய்வாய் நீயே கந்த
மாமலர் சூட்டு வாயே மலே
மங்கை பாகன்றனை நினைந்திரு நீரணிந்திடு வாயே

8 அல்லல் தீர்த்திடும் செல்லமுத்த
னமைத்த சாத்தனை போற்றி மனத்
தன்புடன் புகழ்ந்தேற்றி நம்மை
யண்டிடுந் துயர் மாற்றி உய
ரண்டர்க ளனுதின மணி பாரிஜாத மாமலர்தூற்றி

9 தேங்குமா பிலாவாழை மாதுளை
சிறந்த கற்பகம் போலே இதோ
தெரியுதடி முன்னாலே இன்று
செப்புவே னுன் னாலே விண்
தேவர் மூவர்கள் யாவரும் வந்து சஞ்சரிப்பா ரின்னாலே

10 நாகமென்றுசொல் லத்திமா நகர்
நங்கையே யிது தாமே அடி
நாமகிழ்ந்து வந்தோமே இந்
நகர் வளங்கள் பார்த்தோமே யெந்தன்
நங்கையே தயைப் பொங்கு மாந்தர்கள் நன்னயம் பேசு
(வோமே

11 யாசகர்களுக் கியுந் தண்மையோ
வாசவன் தருப் போலே அதி
யோகமுற் றதினாலே செய்கு
வார்களிப் புவி மேலே யென்
அன்னமே திருமாமலை நம்பி அய்யர் வாரூர் முன்னாலே

12 சற்றவர் திரு மாளிகை தனில்
தங்கமேரெண்டு பேரும் தயிர்
பாலன்னம்நீர் மோரும் உண்போ
மானால்தான்சோபந்தீரும் அடி
தையலேயவர் தர்மவைத்திய சாலையைநன்றுய்ப் பாரும்

13 அன்னவர்செய்த சப்பனைப்படி
யாருதான்புவி மீதே செய்கு
வாரடிநீயே யோது யென
தாசையுற்றிடு மாது இந்த
அகிலமீதினி லகிலநாயக னடிபணிந்திடுஞ் சாது

14 பத்திரகாளியின் புத்ரராய்வந்து
பார்புகழவெந் நாளும் மிகு
பாக்யவான்களாய் வாழும் இப்
பதியைப்பாரடி மேலும் திரு
பங்கஜநய னங்கள் தங்கிய பாவையேசொல்லக்கேளும்

15 கோடிசெல்வம்ப டைத்தமாந்தர்வாழ்
கோதில்லாததோர் மாடி அடி
கோதையேசொல்வேனடி எந்தன்
கூடவேவோடி வாடி முத்து
கொத்துரத்தினப் பச்சைமாமணி குப்பிசூட்டிய லேடி

16 ஆழிசூழுல கோர்மகிழ்காளி
அப்பன்பங்களா மேரு அடி
அன்னமேயென்ன சிரு பக்கம்
சொர்னம்போல்தெப்பம் பாரு மிக்க
அன்புபொங்கும்கருப்பன்பாதத்தை அன்புடன்பணிந்தேரு

17 முத்துரத்தினத் தாலமைத்தமுத்
தாலம்மன்கோவில் பாராய் இந்த
மூவுலகினும் பேராய் வெகு
மூக்கிரமான இவ் வூராய் நம்
முன்னேதோற்றிய பொன்னிகர்த்திடும் சன்னதிக்குநீவாராய்

18 வானுலாவிய கோட்டை கோபுரம்
வயங்குமாமணி ஜோதி இந்த
மானிலமீது கியாதி யுடன்
வாழ்ந்திடும்பர மாதி என்னும்
மாரித்தாய்பதங் கோரியேநிதம் வந்துகண்டோமே நீதி

19 கங்கை காவேரிக் கொல்லடம் யமு
னக்கரைத்தீர்த்தமிதுவே மே
விருந்து வாரதே மதுவே ரெண்டு
பட்டிக்குமிது பொதுவே என்
கண்மணிதேவ ஸ்திரீகளும்வந்து கங்கையாடுதலிதுவே

வேறு சந்தம்.

மாமகள் மேவிய பேரைநகர்தனில் என்ற வர்ணமெட்டு.

1 இன்னமும்நானுனக் கின்பமுடன்சொல்லு
வேனடிமா மயிலே நீமகிழ்ந்
தென்னுடன்வா குயிலே அன்னம்
போலே நடந்த தய்யலே
இன்னொரு மாரியம்மன் கோவிலுண்டடி
இன்னகர் மீதினிலே

2 மன்னவன் செல்லமுத்து மகிபன்மனம்
மகிழ்ந்துமே மானே செய்துவைத்த
மாரியம்மன் தானே உலகம்
வணங்குதடி தேனே
மையல்மிகுத் திடுந்தையலே இங்குள
மகிமைசொல் வேனே

1X1297.

3 மாணிக்கத் தாலஸ்தி பாரமும்பட்டியல்
வாருடனே அமைத்தி பவளத்தினு
லேகால்கள் நிறுத்தி போதியலே
வச்சிரத் தால் திருத்தி
ஆணிப்பொன்னு லழகாகவேகட் டடம்
அன்புடனே பொருத்தி

4 கோமேதகம்புஷ்ப ராகம்வயி ரத்தால்
கோபுரங்கள்ச மைத்து முத்துநவ
ரத்தினங்கள் சேர்த்து சுத்திவெகு
சித்திரங்க ளமைத்து
மாமயிலெழுத்து நீலத்தினுல் சுத்து
வர்னசுவ ரமைத்து

5 கானமயிலாளே சன்னதி முன்கொடி
கம்பமதைப் பாரு எதிரே
கும்பமது நேரு சேவித்து
இன்றுமனந் தேரு
வானம ளாவிய செண்டாசு ருட்டிகள்
வாய்த்த தென்ன சீரு

6 பம்பைத வில்முர செங்குமு ளங்குது
பாராயடி மணியே நாகசுரம்
கொம்புச் சங்குத் தொணியே கோடை
யிடிபோல் ஜொலிக்கு தினியே
அம்பை நிகர்விழி மாதர்கள் கும்மிய
டிப்பதைப் பார் கனியே

7 அக்கினிச்சட்டிக ளேந்தியே வாலிபர்
ஆனந்தக்கூத் தாடி நேர்த்தியென்
றம்பீளையே தேடி சன்னதி
சுத்தியேமுன் னுடி
அன்புடன் வீரதை இன்பமாய்ப் பாரடி
அம்பிளையே நாடி

(8) சத்திசிவன்மகி ளுத்தமியை வலஞ்
சுத்தித்துதிப் பாரும் கயரது
குத்திமகிழ் வோரும் கோடிகள்
கிளித்துவரு வாரும்
பக்தியுடன்முளைப் பாரிகர கத்தை
வைத்துநடிப் போரும்

9 இந்தவிதமான வேடிக்கைக ளெல்லாம்
இன்னும் நடக்கு மடி கடைவீதி
கேகிவருவோ மடி ரூபாயெடுத்
தெந்தன் கையில் கொடடி
சந்தனபுஸ்ப தாம்பூலம்சாம் பிறுணிகர்
பூரம் தேங்காய் வாங்கடி

10 வாழைக் கனியும் வீபூதியுங் குங்குமம்
மாதரசே வாங்கு ஒன்றாக
சேரடிநீ பாங்கு சன்னதிக்கு
என்பிரகே நோங்கு
வாலவய துடையாளே சாமான்களை
வாகுடனே தாங்கு

11 நல்லவழியுணர் செல்லமுத் தானந்த
நாயகியை யடுத்தே துபமதை
யோர்கரத் தாலெடுத்தே மணி
யிடதுகரத்தால் பிடித்தே
அல்லலதீர்த் திவ்வுல கெல்லாம்
செளிப்புர ஐம்புலனால் நினைத்தே

12 அன்னமேஆரு தனைகள் நடக்குது
ஆனந்தத்தின் மேலே நெய்வேத்ய
சாமானை முன்னாலே யெடுத்து

அமைப்பாய் கமலத் திலே
நன்னய மாகவே பூஜை நடத்துவார்
நாம் பணிவோ மயிலே

13 செங்கமலக்கண்ணான் தங்கை யானவளே
சிவன் மகிழ்ந்த வளே அவனியோர்
நிதம் புகழ்ந்த வளே அடிமைதன்
மன துகந்த வளே
சிந்தைம கிழவே யெங்களுக்குக் கல்வி
செல்வமுந் தந்த வளே

14 மாதே ஆசானிடம் விபூதிப் பிரசாதம்
வாங்கினேமே மணியே சிரமதில்
வாகுடனீ யணியே அம்பாள் பத
மாமலரைப் பணியே
கோதையே நம்மள் நகர்வளஞ் சேர
கூடிவாரு யினியே

15 பங்கயக் கண்ணன் பரந்தமானச் சுதன்
பாரளந்த பாதன் பகதர்களு
கேற்றநவ நீதன் நமக்கு
பச்சமுள்ள நாதன்
தங்கவஸ்திரமும் சங்கு சக்ரமும்
தானணிந்த வேதன்

16 இந்த நகரிலிருக்கு மழகனை
யேற்றிப் பணிவமடி துளபத்தால்
தூற்றிப் பணிவமடி தூயரதை
மாற்றிப் பணிவமடி
செந்தமிழ் வெங்கிடசாமிக் குகந்த
திருமகழ் நாதனடி

மங்கம்மாசாலை வழிமேலே—என்ற வர்ணமெட்டு.

1 மாமயிலே வாடி—மன துகந்த லேடி
நாமிருவர் ஜோடி—நடந்து போவோம் கூடி

2 காமரசக் குயிலே—காதலியே யிங்கு வந்து
நேமமுடன் திருநாள் நாமளும் பார்த்தே மகிழ்ந்தோம் (மா)

3 கண்ணன் சகோதரியை—காதலியே நாம் பணிந்தோம்
வர்ணக் குயிலழகி மாதே நம் நகரஞ்சேர (மா)

4 அத்திபட்டி யைக்கடந்து—அன்புமிகும் கன்னிமாரை
பக்தியுட னே துதித்து பாதைவழி யேநடந்து (மா)

5 பொட்டலூர ணிகடந்தோம்—பூவை யரேகாசிபப்பன்
மட்டில்லாத கட்டடம் பார் வந்தமடி கருசல் நிலம் (மா)

6 சூரமுத்துபாம்பு லுசெய் சுத்தமுள்ள தர்ம மதை
நேரிளையே நாம் கடந்து எரினேங் கண்மாக்க ரையில (மா)

7 அய்பன்கருப்ப ணனும் அன்னமே நம் கன்னிமாரே
தையலே நீதுதித்து சதுராசலக்க ரைமேல் (மா)

8 வந்தோம்குடிப் பட்டியில் மங்களஞ்சேரெம்பெருமான்
சந்தோஷமாக வாழுந் தன்மை யைப்பார்த்தென் னுடனே

9 தந்திமுகன் வாழும்பதி தையலே சவுண்டி நதி
சுந்தரியே நாம் கடந்து வந்தோங்கரு ணையுகந்து (மா)

10 காரண பத்தன்திருக் காவடிகொண் டாடிவரும்
கந்தன்ற னை துதித்து எந்தனைநீ யேமதித்து (மா)

11 ஆனந்தவல் லிமகிழ் அண்டர்ப ணிந்துபுகழ்
ஞானந்த ருங்கைலை நாத னி[illegible]தனிலே (மா)

12 பக்தியுடனே நெய்வேத்யம் பாங்குடனே செய்துவரும்
அத்விதச் சங்கரய்ய ரபிசேகம் செய்யும் வேளை (மா)

13 ஈசநடேச னையும் இன்பந்தரும் கந்தனையும்
வாசமிகு மானந்த வல்லியையும் நாம் பணிந்தோம் (மா)

14 ஜெயந்தந்த ருள்கருப்பன் சீர்பாத மேதுதித்து
நயந்தருங் கம்பளத்தார் நகரமதி லெந்தன்கூட (மா)

15 கோதையே குபேர செல்வம் குறையாத கைலைபுரி
நீதிமிகுங் கம்பளத்தார் நேர்மையைப்பார்த் தெந்தனுடன்

16 சுந்தரியேநா மிருந்த சொந்தவீடு வந்துசேர்ந்தோம்
செந்திரு மாமகள்சேர் செல்வம் சிறந்துவாழ (ம)

17 வெங்கிட சாமிதாசன் வேண்டுப வர்க்குநேசன்
பொங்குசெல் வம்பெருகப் பூவையேநீடூழி வாளி (மா)

வெண்பா.

மதிரவிதேவர் மூவர்கள் வாழ்கவே
நிதி தருங்குடி மாநகர் வாழ்கவே
அதிக அன்போடு அச்சிலிடும் முக
மதியன்பிரஸூம் வைபோகமாய் வாழ்கவே

சம்பூரணம் முற்றுப்பெற்றது.

181297.

இதனுல் சகல கனதனவான்களுக்கும் தெரிவிப்

யாதெனில்:—

இப்பிரபந்தம் சொன்ன வில்லாணி சர்வசமய சபா ரஞ்சித ராஜபார்ட் ஆர். எஸ். வெங்கடசாமி அய்யரவர்களால் அநேக புதிய வர்ணமெட்டுகளாகவும், மிகுந்த பக்திரசமாகவும், தென் இந்தியா ஜீவமுக்தர்களுக்கும், பக்தர்களுக்கும் திலகம்போன்ற ஸ்ரீ மாதவ நாம சங்கீர்த்தனம் பாடி மகா-௱-௱-ஸ்ரீ உசிலம்பட்டி டிராமா எஜண்டும், இந்நூலாசிரியருக்கு போதகருமான புலவர் பெருமாள் நாடாரவர்களால் சீர்திருத்தம் செய்து கூடிய சீக்கிரம் வெளிவரும்.

இனம்! இனம்!! இனம்!!!

மூன்றணு தபால் ஸ்டாம்புடன் தங்கள் விலாசத்தை தெரியப்படுத்துகிற பக்த சிகாமணிகளுக்கு

இக்கலியுகத்தில் பின்னல் நடைபெறக்கூடிய சகல விஷயங்களையும் விபரமாய் எடுத்துரைப்பதுடன் நாம் நற்காரியங்களைச்செய்து சிறப்புற்று வாழவேண்டிய உண்மை வழியை எளிதில் உணர்த்தும்

கலியுகமகத்துவமாகிய

காலக்கியானம் என்னும் புஸ்தகம் ஒன்று இனம்.

ரூ $1\frac{1}{2}$ மணியார்டர் செய்வோருக்கு 10 புஸ்தகமும்
ரூ 10 மணியார்டர் செய்வோருக்கு 100 புஸ்தகமும் } அனுப்புவோம்.

அ. ம. அரிஹரபுத்திரக்கோன்,

யாதவன் கம்பெனி, செம்பிகிணத்தெரு, மதுரை.